https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

25th FEBRUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 68




## சஜித்துடன் இணையும் சு.க எம்பிக்கள்:

# தடுக்கும் முயற்சியில் மைத்திரி



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எம்பிக்கள் இருவர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல்

02

## சஜித்–சம்பிக்க சந்திப்பு

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி அரசியல் செய்து வரும் அக்கட்சியின் எம்பி சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசாவை சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளார்.

இதற்கான அனுமதியை சம்பிக்க சஜித்திடம் கோரியுள்ளார்.அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் சில நாட்களில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரம் தெரிவித்துள்ளது.



## ஒரு நாளைக்கு கோடி ரூபா

நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் நாட்களில் ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபா செலவாகிறது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இருந்தும், இவ்வாறு செலவாகின்றமை தொடர்பில் தம்மிடம் எந்தவிதத் தகவலும் இல்லை என்று நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரித்துள்ளார்.

## லஞ்ச, ஊழல்: 73 அதிகாரிகள் கைது

லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடந்த வருடம் 73 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று லஞ்ச, ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதேபோல், லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 3432 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்று லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.





புதுசுடர்
www.puthusudar.lk
2024 FEBRUARY 25 - SUNDAY

# 10 லட்சம் வெட்டு

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் அரசு என்னதான் முன்னேற்றகரமான தகவல்களைக் கூறினாலும் களநிலவரம் அந்தக் கூற்றுக்கு மாறானது.

மக்கள் வாழமுடியாமல் நாளுக்கு நாள் துன்பப்படுகிறார்கள். ஒரு பக்கம் பொருட்களின் விலை அதிகரிப்பு மறுபக்கம் மின்கட்டண அதிகரிப்பு,இன்னொரு பக்கம் மின் துண்டிப்பு.அதில் மின்கட்டண அதிகரிப்பு என்பது மக்களை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடுவதாக அமைந்துள்ளது.

மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறத் தொடங்கியுள்ளனர்.முடிவே இல்லாமல் விலையேற்றத்தைத் தவிர வேறு எந்த மாற்றமும் நிகழ்வதாக இல்லை.

பணக்காரர்களால்கூட வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏழைகளின் நிலைபற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

மக்கள் எந்தப் பக்கமும் நகர முடியாமல் இறுகிப்போய் நிற்கிறார்கள்.தீர்வு என்ற கதைக்கே இடமில்லை.அரசாங்கம் அரசாங்கத்தின் பிரச்சினைக்கான தீர்வை மட்டும்தான் முன்வைக்கிறது. மக்களின் பிரச்னைக்கு எந்தத் தீர்வும் கிடையாது.

புதிய ஜனாதிபதியால் இந்த நாட்டுக்கு-நட்டு மக்களின் பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட தீர்வு என்ன? இவர் பதவி ஏற்றதால் மக்கள் அடைந்த நன்மை என்ன?

கோத்தா இருக்கும்போது என்ன நடந்ததோ அதுதான் இப்போதும் நடக்கிறது.அதைவிட மோசமாக நடக்கிறது.போனவரும் அப்படியே வந்தவரும் அப்படியே.

எரிபொருள் வரிசை இல்லாமலாக்கப்பட்டமைதான் மக்களின் பிரச்சனைக்கான சரியான தீர்வு என்பதுபோலவும் அதைச் செய்தது பெரிய சாதனைபோலவும் கூறிக்கொண்டு திரிகிறது இந்த அரசு.

மக்கள் வீதிக்கு இறங்கி போராடி கோத்தாவை விரட்டியடித்து பெற்றுக்கொண்ட நன்மை என்ன? எதுவும் இல்லை. மாறாக மேலும் பிரச்சினையைத் தேடிக்கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

கோத்தாவை விரட்டிய மக்கள் ரணிலைக் கண்டதும் அப்படியே போராட்டத்தை நிறுத்திக்கொண்டனர்.அவர் அனுபசாலி-திறமைசாலி-சர்வதேச தொடர்புடையவர் என்ற மாயைக்குள் மக்கள் சிக்கி ஏமாந்துபோனார்கள்.

அவரது சர்வதேச தொடர்பால் எதுவும் நடக்கவில்லை.ஒரு உதவியும் கிடைக்கவில்லை. கோத்தாவை விட்டிருந்தால் என்ன நடந்திருக்குமோ அதுதான் இப்போது நடக்கிறது.

மிகவும் சூட்சுமமான முறையில் தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக ரணிலை ஜனாதிபதியாக்கி வெற்றிகண்டுள்ளது இந்த அரசு. மக்களின் போராட்டம் வீணாகவே போயுள்ளது.

ராஜபக்ஸ குடும்பத்தைப் பாதுகாக்க வந்தவர் எப்படி மக்களை பாதுகாப்பார்? எப்படி மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பார்?

மீண்டும் தான் எப்படி ஜனாதிபதியாக முடியும் என்பதுபற்றித்தான் ரணில் சிந்திக்கிறாரே தவிர எப்படி மக்களின் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பது என்பதுபற்றி சிந்திப்பதாக இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதுபற்றித்தான் ரணில் யோசிக்கிறார்.13 ஆவது திருத்தச் சட்டத்தை-அதிகாரப்பகிர்வை வழங்கப்போவதாகக் கூறிக்கொண்டு அதனூடாக வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அபகரித்து ஜனாதிபதியாகும் திட்டத்தில்தான் ரணில் உள்ளார்.

அவர் மக்களின் தீர்வாக நம்பி இருப்பது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை மட்டும்தான். அதுவரைக்கும் மக்கள் இப்படித்தான் துன்பப்படப்போகிறார்கள்.

அது கிடைத்தாலும்கூட பெரிய மாற்றம் ஒன்றும் நிகழ்ந்துவி டாது என்பதுதான் உண்மை.

கோத்தா இருக்கும்போது இருந்த நிலைமையைவிட நிலைமை இப்போது மோசமாகவே உள்ளது. அவர் பதவியை விட்டு ஓடும்போது இருந்த பொருட்களின் விலைகள் அல்ல இப்போது இருப்பது.பல மடங்குகள் அதிகரித்துவிட்டன.

தற்போதைய மின்கட்டண அதிகரிப்பால் மக்கள் மேலும் சிக்கலுக்குள் வீழ்ந்திருக்கின்றனர். மின்கட்டணத்தை செலுத்துவதற்காக தனியாக உழைக்க வேண்டிய கட்டத்தில் மக்கள் இருக்கின்றனர்.

மின் கட்டணத்தை அதிகரித்தது மாத்திரமன்றி அதைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தையும் வெட்டிவிட்டது.

இதனால் தற்போதுவரை நாட்டில் 10 லட்சத்துக்கும் அதிகமான மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.பொருளாதார பிரச்சினை காரணமாக அதிகரித்த மின் கட்டணத்தை மக்களால் செலுத்த முடியவில்லை.இதனால் மூழ்கியுள்ளன அந்த இடங்கள்.

மின்கட்டணமும் அதிகரித்து-அந்த அதிகரிப்பால் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கின்றபோது மக்களின் நிலைமை மிக மிக மோசமாக மாறும்.மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்துக்குச் செல்வதற்கு இந்த நிலைமை உந்து சக்தியாக மாறும் என்றே தெரிகிறது.

## சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்தில் வீடு தீப்பற்றி எரிந்து முற்றாக நாசம்



( எம்.எம்.ஜெஸ்மின், எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்திலுள்ள வீரோன்றில் கடந்த சனிக்கிழமை (24)ஏற்பட்ட தீயினால் வீரோன்று முற்றாக எரிந்துள்ளதுடன் வீட்டிலிருந்த பொருட்களும் தீக்கிரையாகியுள்ளன.

வீடு தீப்பற்றிய நேரத்தில் வீட்டில் எவரும் இருக்கவில்லை என்றும் தீயை அணைக்க அயலவர்கள் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுவதுடன், கல்முனை மாநகரசபை தீயணைக்கும் படையினர் வரவழைக்கப்பட்டு தீயை அணைத்தும் வீடு தீக்கிரையாகிவிட்டது .

அண்மையில் இக் கிராமம் வெள்ள அனர்த்தத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




**சஜித்துடன்...**

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சு.கவுக்குக் கிடைத்துள்ளது என்றும் அந்த இருவரையும் தடுப்பதற்கு சு.க தலைவர் மைத்திரிபால சிறிசேன களத்தில் இறங்கியுள்ளார் என்றும் சு.க வட்டாரம் தெரிவிக்கிறது.

சு.கவின் நீண்ட கால உறுப்பினராக இருந்த ஷான் விஜயலால் எம்பி அண்மையில் சஜித்துடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவரது இணைவின் பின் மேலும் பல எம்பிக்களுக்கு அவர் அங்கிருந்து தூண்டில் போடுகிறார் என்று அறிய முடிகிறது.

அதன் பயனாகவே புதிதாக இருவர் இணையவுள்ளனர் என்று சு.க வட்டாரம் கூறுகிறது.





# அடுத்த ஜனாதிபதி அநுரதானோ..???

இது தேர்தல் வருடம்.ஜனாதிபதி தேர்தலுக்கான வருடம். அந்தத் தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்கள் இருக்கின்றன. ஆனால்,தேர்தல் பரபரப்பு இப்போதே தொடங்கிவிட்டது.

ஜனாதிபதி பதவியைக் குறி வைத்து களத்தில் குதித்துள்ள முக்கியமான மூன்று வேட்பாளர்கள் இப்போதே பம்பரமாகச் சுழல்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசா,தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவருமே அந்த முக்கிய வேட்பாளர்கள்.

இந்த மூவரில் அதிகம் பேசப்படும் வேட்பாளர் அநுரகுமாரதான்.ஆளுந்தரப்பாக இருக்கட்டும்பிரதான எதிர்க்கட்சியாக இருக்கட்டும் எல்லோரும் இப்போது குறி வைத்துத் தாக்குவது அனுரவைத்தான்.

காரணம் கள நிலவரம்தான். ஆம்.மக்களின் செல்வாக்கு அனுரவுக்குத்தான் சாதகமாக இருக்கிறது.புலனாய்வு அறிக்கையும் அதையே சொல்கிறது.

இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில்தான் அமைந்துள்ளது அனுரவின் இந்திய விஜயம்.

அவர் உள்ளிட்ட குழுவினர் இந்திய அரசின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று இந்தியா சென்று வந்ததுதான் இப்போது இலங்கை அரசியல் அரங்கின் பேசு பொருளாக மாறியுள்ளது.

ஜேவிபி அரசும் அல்ல்பிரதான எதிர்க்கட்சியும் அல்ல.வெறுமனே மூன்று ஆசனங்களை மாத்திரம் வைத்துள்ள கடைசி நிலை எதிர்க்கட்சி.

ஆனால்,அப்படிப்பட்ட சிறிய எதிர்க்கட்சியை அழைத்து இந்திய அரசு பேசி இருப்பதுதான் எல்லா அரசியல்வாதிகளுக்கும் வயிற்றை கலக்கியுள்ளது.

அதுவும் எப்போதுமே இந்திய எதிர்ப்பு அரசியலை தனது கொள்கையாகக் கொண்டுள்ளது ஜேவிபி.அப்படிப்பட்ட ஒரு கட்சியை இந்திய அரசு ஏன் அழைத்துப் பேசியுள்ளது என்று குழம்பிப் போயுள்ளார்கள் ஜேவிபி எதிர்ப்பு அரசியல்வாதிகள்.

அடுத்து ஆட்சியைப் பிடிக்கப்போவது ஜேவிபிதான் என்ற ஊகம்தான் இந்திய அரசின் இந்த அழைப்புக்குக் காரணம் என்று சொல்லலாம்.

நாட்டில் இன்று ஜேவிபி அலைதான் அடிக்கிறது.இந்த அரசியல் வாதிகள்மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது,மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற பெரும் கட்சிகள் எல்லாம் ஒரேமாதிரிதான் இருக்கின்றன. ஊழல்,மோசடி,திருட்டு எல்லாம் எல்லா ஆட்சியிலும் சமமாகவே இடம்பெறுகின்றன..

மஹிந்தவின் அரசில் ஊழல் என்று கூறித்தான் மக்கள் 2015 இல் மைத்திரி-ரணில் அரசைக் கொண்டுவந்தனர்.அதிலும் ஊழல் இடம்பெற மீண்டும் மஹிந்தவின் பக்கம் திரும்பி கோத்தாவின் அரசைக் கொண்டு வந்தனர்.

கோத்தாவோ இரண்டு வருடங்களுக்குள் நினைத்துப் பார்க்க முடியாதவாறு-தாங்க முடியாதவாறு நாட்டை பொருளாதாரரீதியில் அதலபாதாளத்தில் தள்ளிவிட்டு பதவியை விட்டு ஓடிவிட்டார்.

இதனால் அவரும் மக்களை ஏமாற்றியுள்ளார்.மக்கள் அவர்மீது வைத்த நம்பிக்கைமீது மண் அள்ளிப் போட்டுள்ளார்.

இறுதியில் ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார். அப்போதும் முன்னேற்றமில்லை. கோத்தாவின் ஆட்சியில் இருந்ததை விடவும் மோசமான முறையில் வாழ்க்கை செலவீனம் உயர்ந்துள்ளது.பொருளாதாரம் வீழ்ந்துள்ளது.

கோத்தாவின் ஆட்சியில் இருந்த மின் வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மாத்திரம் ரணில் தீர்வைக் கண்டுள்ளார்.மற்றைய விடயங்கள் மக்களால் தாங்க முடியாத சுமையாக உள்ளது.

பொருட்களின் விலைகள் உயர்ந்துகொண்டே செல்கின்றன.மின்சார கட்டண அதிகரிப்பில் இலங்கை ஆசியாவிலேயே முதலிடத்தில் உள்ளது. மின் கட்டணத்தை செலுத்த முடியாமல் 50 லட்சம் மின் துண்டிப்புகள் இடம்பெற்றுள்ளன.

வட் வரிகள் போன்ற பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. லட்ச கணக்கில் தொழில்சாலைகள்,சிறிய வர்த்தகங்கள் எல்லாம் மூடப்பட்டுள்ளன.

மக்கள் தொழில் வாய்ப்பை இழந்து வெளிநாடுகளுக்கு தொழில் தேடிச் செல்கின்றனர். அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. வறுமை,வேலையின்மை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

ரணிலின் ஆட்சியிலும் ஊழல்,மோசடிகள் இடம்பெறத்தான் செய்கின்றன. வைத்திய துறையில் இடம்பெற்றுள்ள ஊழல் இன்று பேசு பொருளாக மாறியுள்ளது.முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வல அதற்காகக் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆகவே,மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகள் இந்த ஊழலை சர்வ சாதாரணமாகவே செய்கின்றன.இதனால் ஊழலுக்கு எதிராகப் பேசுகின்ற-எளிமையான வாழ்க்கை வாழ்கின்ற ஜேவிபிமீதே மக்களின் கவனம் திரும்பியுள்ளது.

இந்த முறை அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்ப்போம்.அவர்கள்தான் இதற்கு சரியானவர்கள் என்ற கருத்து மக்கள் மத்தியில் நிலவுகிறது.

யாரிடம் கேட்டாலும் ஜேவிபி..ஜேவிபி என்றே பேசுகின்றனர்.இது தொடர்பில் புலனாய்வு அறிக்கை ஒன்றும் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜேவிபியின் மக்கள் செல்வாக்கு அதிகரித்துச் செல்வதுபற்றி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய புலனாய்வின் தேடுதலிலும் ஜேவிபியின் செல்வாக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே,அடுத்து ஆட்சியைப் பிடிக்கப்போவது ஜேவிபிதான் என்று இந்தியா முடிவு செய்ததன் காரணமாகவே ஜேவிபியை அழைத்துப் பேசியுள்ளது என்று கருதலாம்.

அதுபோக,இந்த விஜயத்தால் இலங்கைக்குள்ளும் ஜேவிபியின் செல்வாக்கு மேலும் அதிகரித்துள்ளது.ஜேவிபிதான் அடுத்த அரசு என்று மக்கள் நம்பத் தொடங்கியுள்ளனர்.

அப்போ..அடுத்த ஜனாதிபதி அனுரதானோ..?



# புனித ஹஜ்
# HAJJ 2024
## ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்




**36** வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

**ஹஜ் பெகேஜில் அடங்குபவை**

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**
**0775046995 I 0777667152**
**அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391**

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com






47 ஆண்டுகால அனுபவமும், மூத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

**நாம் வழங்கும் சேவை**

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

**நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்**

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service Over 3 Decades

IATA ACCREDITED AGENT



# ஹஜ்
# HAJJ 2024
## வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்



**Our Services**

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

Luxury Package
Short Package



தரமான சேவையுடன்
அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின்
நேரடி வழிகாட்டலில்
புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன்
நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:
**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk



# புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.



**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

**நாம் வழங்கும் சேவை**

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான்**
இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்:
**749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - **0777141151**
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - **0777151156**

# பின்னூரியா

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**
#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

கேள்வி: எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீகள் ?

கேள்வி: ஜனாதிபதி தேர்தலில் உங்களது ஆதரவு யாருக்கு?

கேள்வி: ஜேவிபியை இந்தியா அழைத்ததைத் தொடர்ந்து அவர்களின் மக்கள் செல்வாக்கு அதிகரித்திருப்பதுபோல் தெரிகிறது அல்லவா?

கேள்வி: பொருளாதார பிரச்சினைக்கு ரணில் விக்ரமசிங்க சில தீர்வுகளை முன்வைத்தார் என்று கூறப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலில் ரணில் வெல்லும் வாய்ப்பு உண்டா?

கேள்வி: சம்பிக்க ரணவக்கவும் போட்டியிடவுள்ளார் என்று சொல்லப்படுகிறதே.இது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?



# ரணில் வெல்வாரா?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி: எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீகள்?**

பதில் : ஜனாதிபதி தேர்தல்தான் முதலில் என்று நான் நினைக்கிறன். அதற்கு காரணமும் உண்டு. நாடாளுமன்ற பெரும்பான்மை இல்லாமல் போனால் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறை இருந்தும் வேலை இல்லை.

அதற்கு சிறந்த உதாரணம் உண்டு.1999இல் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றது சந்திரிகா.2001இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றது ஐக்கிய தேசிய கட்சி.

ரணில் பிரதமராகி புலிகளுடன் ஒப்பந்தம் செய்தார்.நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி சந்திரிக்காவால் அதைத் தடுக்க முடியவில்லை.

அதனால் ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துவதற்கே ரணில் முயற்சி செய்வார்.

**கேள்வி: ஜனாதிபதி தேர்தலில் உங்களது ஆதரவு யாருக்கு?**

பதில் : தேர்தலுக்கு 7 மாதங்கள் உள்ளன.இப்போது உண்மையான வேட்பாளர் வெளிவரமாட்டார்.இப்போது அறிவிக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் தேர்தல் நெருங்கும்போது காணாமல் போய்விடுவார்கள்.

2005இல் சந்திரிக்கா தரப்பு லக்ஷ்மன் கதிர்காமரையே வேட்பாளராக நிறுத்துவதற்குத் தீர்மானித்திருந்தது.கதிர்காமர் புலிகளால் கொல்லப்பட்டதால் மஹிந்த ராஜபக்ஸ வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

அதேபோல் 2019 ஜனாதிபதி தேர்தலில் நாகானந்த கொடிதுவக்குதான் வேட்பாளர் என்று கூறப்பட்டது.தேர்தல் நெருங்கும்போது அவரைக் காணவில்லை.

ஆகவே இப்போது அவசரப்படத் தேவையில்லை.தேர்தலுக்கு 3 மாதங்கள் இருக்கும்போது யாருக்கு எமது ஆதரவு என்று சொல்லுவோம்.

**கேள்வி :ஜேவிபியை இந்தியா அழைத்ததைத் தொடர்ந்து அவர்களின் மக்கள் செல்வாக்கு அதிகரித்திருப்பதுபோல் தெரிகிறது அல்லவா?**

பதில் : இந்த ஆய்வை நடத்தியது ஸைளவவைரனந ழக ாநயடவா ிழடஉைல என்ற நிறுவனம்.இது சுகாதாரம் பற்றி ஆய்வு நடத்தும் நிறுவனம்.இது ஏன் அரசியல் பற்றி ஆய்வு நடத்தியது என்ற கேள்வி எழுகிறது.

அடுத்ததாக இவர்களின் ஆய்வுப் பணிக்கு நீலன் திருச்செல்வம் அமைப்பு நிதி வழங்கியது என்றும் இப்போது நடத்தப்பட்ட ஜேவிபி தொடர்பான ஆய்வுக்கு ஸைளவவைரனந ழக ாநயடவா ிழடஉைல நிறுவனமே செலவு செய்தது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இது வருமானம் இல்லாத நிறுவனம்,அவர்களிடன் எப்படி பணம் இருக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.

அதுபோக, அவர்கள் ஆய்வு நடத்தியவர்களின் விகிதாசாரத்திலும் சிக்கல் உள்ளது.

**கேள்வி : பொருளாதார பிரச்சினைக்கு ரணில் விக்ரமசிங்க சில தீர்வுகளை முன்வைத்தார் என்று கூறப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலில் ரணில் வெல்லும் வாய்ப்பு உண்டா?**

பதில் : அவர் போட்டியிடமாட்டார் என்று 6 மாதங்களுக்கு முன்பே கூறிவிட்டேன்.அதை மெய்ப்படுத்தும் வகையில் ஒரு சம்பவம் நடந்துள்ளது.

இந்திய தொலைக்காட்சிக்கு பேட்டி வழங்கிய ரணில் அதில் கேட்கப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான கேள்விக்கு பதில் வழங்கவில்லை.

அவர் ஜனாதிபதியானதும் முதலில் போராட்டக்காரர்களை அடக்கி எரிபொருள் வரிசையை இல்லாது செய்தார்.இதனால் அவர் உயரத்துக்கு வந்தார்.

அடுத்து ஐஆகு உடன் ஒப்பந்தம் செய்து மேலும் உயர்ந்தார்.அப்போது தேர்தல் நடத்தியிருந்தால் ரணில் வென்றிருப்பார்.

பிறகு 13பிளஸ் என்றதும் கீழே இறங்கிவிட்டார்.பொருட்களின் விலை உயர்ந்ததும் மேலும் கீழே இறங்கினார்.மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டதும் மேலும் அடுத்த படி இறங்கினார்.வட் வரியை அதிகரித்ததும் இன்னும் இறங்கினார்.

அவரது மக்கள் செல்வாக்கு இப்போது 10 முதல் 20 வீதம் வரைதான் உள்ளது.இன்னும் குறைந்துகொண்டுதான் செல்லும்.

இந்த நிலையில் அவர் போட்டியிட்டால் இலங்கையின் வரலாற்றில் அதி குறைந்த விகிதாசார வாக்குப் பதிவைப் பெற்று சாதனை படைப்பார்.

அவர் போட்டியிடாது கௌரவமாக ஓய்வு பெறுவதே நல்லது.

**கேள்வி : சம்பிக்க ரணவக்கவும் போட்டியிடவுள்ளார் என்று சொல்லப்படுகிறதே.இது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : அவர் தகுதியற்றவர் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன.முதலாவது மக்கள் செல்வாக்கு இல்லை. ஜனாதிபதியானவர்கள் எல்லோரும் அவரவர் மாவட்டங்களில் அனைத்துத் தேர்தல்களிலும் முதலாமிடம் வந்தவர்கள்.

சம்பிக்க கடந்த இரண்டு தேர்தல்களிலும் 5ஆம் இடம் வந்தவர்.கடந்த தேர்தலில் 5000 வாக்குகள் குறைந்திருந்தால் ஹிருணிகா எம்பியாகி இருப்பார்.

இரண்டாவது காரணம் அதிகார துஸ்பிரயோகம்.அமைச்சராக இருக்குபோது அவர் அதிகார துஸ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இளைஞன் ஒருவரை வாகனத்தால் முட்டி பொலிஸ் அறிக்கையில் மாற்றம் செய்தார் என்ற குற்றச்சாட்டு உள்ளது.இவ்வாறு பல குற்றச்சாட்டுகள் உள்ளன.

மின்சார துறை அமைச்சராக இருந்தபோது 2010இல் நன்கு மழைபெய்த சமயத்தில் 10 பில்லியன் இலாபம் கிடைத்தது.அதற்கு அவரது முகாமைத்துவமே காரணம் என்றார்.

அதேபோல் கோடை காலத்தில் 14 பில்லியன் நட்டம் ஏற்பட்டது. அதற்கும் அவரவல்லவா பொறுப்பேற்க வேண்டும்.அதை அவர் செய்யவில்லை.

**கேள்வி : ஒருவேளை ஜேவிபி வென்றால் அவர்களால் இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா?**

பதில் : துன்பத்தில் இருந்து மீள்வதாக இருந்தால் அந்த துன்பத்துக்கான காரணத்தைத் தேட வேண்டும்.இந்தப் பொருளாதார பிரச்சினையோடு இரண்டு பிரச்சினைகள் ஒன்றுசேர்ந்துள்ளன.

ஜேவிபி சொல்லும் பிரச்சினை என்ன? 70 வருடங்களாக ஆட்சியாளர்கள் திருடியமை என்று. அடுத்து ஊழல்.மோசடி. இவை இல்லாதொழிக்கப்பட்ட வேண்டும்தான்.ஆனால்,அதை மட்டும் செய்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

இந்தியா உலகில் அதிக பொருளாதார வளர்ச்சியைக் காட்டும் நாடு.அங்கு அரச கட்டமைப்பு ஊழல் நிறைந்தது.அந்த ஊழல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கவில்லை.

**கேள்வி: அதேபோல், எமது பொருளாதார பிரச்சனைக்கு ஊழல் காரணமல்ல.உண்மையான பிரச்சினைதான் நாட்டில் டொலர் இன்மை. இதற்கு என்ன தீர்வு ?**

ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் இல்லாவிட்டால், இறக்குமதி செலவைக் குறைக்க வேண்டும்.ஜேவிபிக்கு இந்த உண்மை தெரியாது.- என்றார்.

> ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் இலங்கையின் வரலாற்றில் அதி குறைந்த விகிதாசார வாக்குப் பதிவைப் பெற்று சாதனை படைப்பார்.

# போகமாட்டேன்

நாடாளுமன்றில் ஜனாதிபதியின் சிம்மாசன உரையை புறக்கணிப்பது என்று ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுத்தது அல்லவா.

உரை இடம்பெற்ற அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் சபையை விட்டு வெளியேறினர்.

அப்போது ராஜித சேனாரத்ன மற்றும் சரத் பொன்சேகா உள்ளிட்ட சில எம்பிக்கள் சபையில் இருந்தனர்.

இவர்களை கண்ட சஜித் பிரேமதாசா,புத்திக பத்திரனவை அழைத்து "" அவங்களயும் வெளியேறச் சொல்லுங்க ..""  என்று கூறிவிட்டுச் சென்றார்.

அதன்படி ,பொன்சேகாவுக்கு அருகில் சென்ற புத்திக "" சேர்..நம்மட எம்பிமார் எல்லாரும் வெளிய போறாங்க.வாங்க நாமலும் போவம் ..""  என்றார்.

முடியாது என்று ஒரே அடியில் கூறினார் பொன்சேகா.

"" எமது கட்சி எம்பிக்கள் கூட்டத்துல முடிவு எடுத்து இருக்கோம்.ஜனாதிபதிட ஸ்பீச்ச புறக்கணிக்கிற என்று..""  என மேலும் சொன்னார் புத்திக

"" நான் அந்தக் கூட்டத்துக்கு வரல்லியே..அதால எனக்கு அது பொருந்தாது .""  என்றார் பொன்சேகா.

இதனால் புத்திக வெறுங்கையோடு சபையை விட்டு வெளியேறினார்.

## ராஜிதவும்.. அப்படியே...



அதே நேரம் ராஜிதவும் சபையில் அமர்ந்திருந்தார்.அவரிடம் சென்ற திஸ்ஸ அத்தநாயக்க. கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தைக் கூறி சபையை விட்டு வெளியேறுமாறு கூறினார்.

அவரும் மறுத்துவிட்டார். அந்தக் கூட்டத்துக்கு நான் வரவில்லை என்று கூறினார்.

மேலும், ஜனாதிபதி என்ன பேசுகிறார் என்று நான் கேட்க வேண்டும் என்று சொன்னார்.

புத்திக பதிரனவைப்போல் திஸ்ஸ அத்தநாயக்கவும் தோல்வியுடன் சபையில் இருந்து வெளியேறினார்.






## போகப் போகப் பாருங்களன் கூத்த..!!!

அந்தத் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டவர்கள் ஜனாதிபதியை சுற்றி நின்று அரசியல் பேச்சுக்களை தொடங்கினர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன ஜனாதிபதியிடம் கேட்டார் "" ஐக்கிய மக்கள் சக்திக்குள்ள பிளவு வந்துட்டுப்போல என..""  என்று..

ஒரு மாதிரியாக சிரித்துக்கொண்ட ஜனாதிபதி..""  போகப் போகப் பாருங்களன் கூத்த..""  என்றார்.

இதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட மஹிந்த ராஜபக்ஸ ஒரு நக்கல் சிரிப்பொன்றை விடுத்தார்.

நிகழ்வை முடித்துக்கொண்டு ஜனாதிபதி நேராக அவரது அறைக்குச் சென்றார்.

அங்கு பலர் கூடி நின்றனர். அவர்களுள் சரத் பொன்சேகாவும் ஒருவர்.ஜனாதிபதியும் பொன்சேகாவும் அங்கு தனியாகப் பேசிக்கொண்டனர்.

## ஜனாதிபதியின் சொந்தச் செலவில்...



அன்றைய தினம் ஜனாதிபதியின் சிம்மாசன உரை முடிவுற்றதும் எல்லா எம்பிக்களையும் தேநீர் விருந்துக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் ஏற்கனவே ஜனாதிபதியின் உரையை புறக்கணித்ததுபோல் இந்த தேநீர் விருந்துபசாரத்தையும் புறக்கணித்தனர்.

ஆனால்,ராஜிதவும் பொன்சேகாவும் தேநீர் விருந்தில் கலந்துகொண்டனர்.இந்த விருந்துபசாரம் ஜனாதிபதியின் சொந்தச் செலவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தேங்காய் திருவளை ஆயுதமாக



பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச 2500 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்றை அவரது சொந்த ஊரில் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

அங்கு அவர் ஒரு தகவலைத் தெரிவித்தார்.

அதுதான்  மொட்டு கட்சி எம்பிக்களின் வீடுகள் போராட்டக்காரர்களால் எரிக்கப்பட்டபோது அவரது வீடோ அவரது உறவினர்களின் வீடுகளோ எரிக்கப்படவில்லை என்ற தகவல்.

அதற்கு காரணம் அந்த ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அந்த வீடுகளை பாதுகாத்தமைதானாம்.

அந்த ஊர் பெணகள் எல்லோரும் தேங்காய் திருவளையை எடுத்து வந்து வீட்டைப் பாதுகாப்பதற்குத் தயாராக இருந்தார்களாம்.

## சஜித்தை ஜனாதிபதியிடம் போட்டுக் கொடுத்தவர்கள்



அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் இருவர் ஜனாதிபதியைத் திருட்டுத்தனமாக சந்தித்து பேசினர்.

அப்போது அவர்களின் தலைவர் சஜித் பிரேமதாசாவை வாய்க்கு வந்தபடி ஜனாதிபதியிடம் போட்டுக் கொடுத்தனர்.

"எங்கட தலைவர் வேல இல்ல சேர்.மைக்க கண்டா போதும்.அவ்வளவுதான்.பேசி தள்ளுவார்.ஆனா. ஆக்சன் ஒண்டுமில்ல.பிஸ்னஸ் ஆட்கள்தான் அவர வழிநடத்துறாங்க.""  என்று கண்டபடி போட்டுக் கொடுத்தனர்.

மேலும்,"""நீங்க ஜனாதிபதி தேர்தலில போட்டியிடமாட்டீங்க என்று நினைச்சுகிட்டு இருக்காரு சேர்.."  என்றும் கூறினர்.

"இல்ல.உங்கட தலைவர்ட்ட சொல்லுங்க நான் போட்டியிடுற எண்டு.""  என்று கூறினார் ஜனாதிபதி சிரித்துக்கொண்டு.



வீரவில ஹில்டன் ஹோட்டலில் ஒரு திருமணம்.அந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஒரு அழகான பெண்ணுடன் ஆட்டம் போட்டார்.

அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவியது.இதைப் பார்த்த சக எம்பிக்கள் யார் இந்தப் பெண்ணென்று வாய் பிளந்து நின்றார்கள்.

சில நாட்களுக்கு முன் அந்த எம்பிக்கள் நாடாளுமன்றில் நின்றனர்.அந்த வீடியோவைப் பார்த்துக்கொண்டு.அப்போது அங்கு வந்தார் பிரசன்ன ரணதுங்க..

## அழகான பெண்ணுடன் ஆட்டம் போட்ட அமைச்சர்

அவரைச் சுற்றி வளைத்து விசாரிக்கத் தொடங்கினார்கள் அந்த எம்பிக்கள்.

"" என்ன சேர்..:அழகான குட்டியோட ஆட்டம் போடுறீங்க.யார் ஆள்.நாங்க பாவமில்லையா சேர்..""  என்று கேட்டார் கோகிலா ஹர்சனி எம்பி.

"" அது என்ட அன்னாட மகள்.வீரவில ஹில்டனில் ஒரு மாசத்துக்கு முதல் நடந்த கல்யாணத்துல ஆடுனது.அந்த வீடியோவ அவ இப்பதான் அவட இன்ஸ்டாகிராமில் போட்டு இருக்கா..""  என்று பதில் கூறினார் பிரசன்ன.

இருந்தும்,அதை நம்ப மறுத்து "" பொய் சொல்றீங்க சேர் .""  கோகிலா...

இருந்தும்,அவர் வாதாடி அது தனது அண்ணனின் மகள்தான் என்று நிரூபித்தார்.




# காதாரத் துறையை மேம்படுத்தும் மக்கள் வங்கி

சுகாதாரப் பராமரிப்புத் துறையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மக்கள் வங்கி மீண்டும் ஒரு முறை முன்வந்துள்ளது.

தனது "மகாஜன மெஹெவர" நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பொரளை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் அத்தியாவசியமான புனரமைப்புப் பணிகளுக்கு வங்கி அனுசரணையளித்துள்ளதுடன், நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சௌகரியத்திற்கு அவசியமான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு ஸ்தாபனங்கள் சமூகத்திற்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கு அவற்றுக்கு உதவுவதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பை இச்செயற்திட்டம் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கை எங்கிலுமுள்ள பெண்களுக்கு விரிவான பராமரிப்பை வழங்குவதில் பெயர்பெற்றுள்ள காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, இந்த உன்னதமான முயற்சியின் பயனைப் பெற்றுள்ளதுடன், அதன் வசதிகளுக்கு மிகவும் தேவைப்பட்ட புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வின் அடையாளமாக மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச அவர்கள் காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் தந்தநாராயண அவர்களிடம் இதற்கான காசோலையை கையளித்து வைத்துள்ளார்.

# விநியோக சேவையாளர்களைக் கொண்டாடும் ஊபெர்

இலங்கையின் மிகவும் அபிமானம்பெற்ற உணவு மற்றும் மளிகைப் பொருட்களை விநியோகிக்கும் தளமான ஊபெர் ஈட்ஸ், இன்று 'Delivery Bonanza' ஊக்குவிப்பின் நான்காவது பதிப்பில் விநியோக சேவையாளர்களின் பங்களிப்பை தனது தளத்தில் கொண்டாடியுள்ளது.

நம்பகமான மற்றும் தங்குதடையற்ற விநியோகங்கள் மூலம் உண்பவர்களுக்கு சிறந்த தள அனுபவத்தை வழங்கிய மிகவும் ஈடுபாடுகளைப் பேணிய 300 விநியோக சேவையாளர்களை நிறுவனம் அங்கீகரித்து, கௌரவித்துள்ளது.

குறைந்தபட்ச ரத்துசெய்தல், தரம் அல்லது பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களுடன் அதிகபட்ச விநியோகங்களின் அடிப்படையில்




விநியோக சேவையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.

Delivery Bonanza 4.0 இன் ஒரு பகுதியாக, கொழும்பு, கண்டி, குருநாகல், நீர்கொழும்பு, களுத்துறை, காலி, பேருவளை மற்றும் பண்டாரகம ஆகிய பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோக சேவையாளர்கள் ஊபெர் ஈட்ஸ் தளத்திற்கு வழங்கியுள்ள தொடர்ச்சியான பங்களிப்பிற்காக ரூபா 8 மில்லியன் மதிப்புள்ள பரிசுகளுடன் அங்கீகரிக்கப்பட்டனர்

பல்வேறு பாரிய வீட்டு உபயோகப் பொருட்கள் முதல் பல்பொருள் அங்காடி பரிசு வவுச்சர்கள் மற்றும் மழைக்கவச அங்கிகள் வரை பல்வேறு பரிசுகள் அடங்கியிருந்தன.

மிகவும் கூடுதலான அளவில் ஈடுபாடுகளைப் பேணிய பதினொரு விநியோக சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட மாபெரும் பரிசுகளில் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள், மின்சாரத்தில் இயங்கும் ஸ்கூட்டர்கள் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் சைக்கிள்கள் ஆகியவை அடங்கும்.



# தீவா கரத்திற்கு வலிமை

Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை வர்த்தகநாமமான தீவாவினால் (Diva) முன்னெடுக்கப்படும் "தீவா கரத்திற்கு வலிமை" தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, Women in Management (WIM) உடன் இணைந்து முன்னெடுக்கும், பெண் தொழில் முனைவோருக்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதன் மூலம், இன்றைய பொருளாதார நிலையில், தன்னம்பிக்கையுடன் தங்கள் தொழில்களை மேற்கொள்ள அதிகாரமளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த சாதகமான தாக்கம் நிறைந்த திட்டமானது, பெண்களை உற்பத்தியாளர்கள் எனும் நிலையிலிருந்து தொழில்முனைவோராக மாறும் மனநிலைக்கு மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது.

பெண் தொழில்முனைவோர் சவாலை எதிர்கொள்ளும் வகையில், சிறந்த நிதி முகாமைத்துவம், விலை நிர்ணயம், சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் பராமரிப்பு, டிஜிட்டல் சந்தைகள், வர்த்தகநாம பிரபலப்படுத்தல், பொதியிடல் போன்ற அம்சங்களின் மூலம் அவர்களுக்கு வணிக முறையின் அடிப்படை அம்சங்களை காண்பித்து, அவர்களை வலுவூட்டுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தங்கொட்டுவ, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, அண்மையில் வெலிமடையிலும் இது விரிவுபடுத்தப்பட்டது.

ஒவ்வொரு செயலமர்வின் போதும், இத்திட்டமானது அதன் எல்லையையும் அது ஏற்படுத்தும் சாதகமான தாக்கத்தையும் விரிவுபடுத்தியவாறு, நாடு முழுவதும் உள்ள தொழில்முனைவோரை மேம்படுத்துகிறது.

# உலகின் 37ஆவது உறுதியான இஸ்லாமிய வங்கியாக அமானா



2023 ஆம் ஆண்டில் உலகின் உறுதியான இஸ்லாமிய வங்கிகளில் அமானா வங்கி 37 ஆம் இடத்துக்கு உயர்வடைந்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஏசியன் பாங்கர் தரப்படுத்தலில் இந்த உயர்வு பதிவாகியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் 82 ஆம் இடத்தில் காணப்பட்ட நிலையில், இந்த உயர்வை எய்தியுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்காசிய பிராந்தியங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற பல இஸ்லாமிய வங்கிகளை பின்தள்ளி, அமானா வங்கி முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் காணப்படும் வட்டியின் அடிப்படையில் இயங்காத நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் நிதிப் பெறுபேறுகள் மற்றும் ஐந்தொகைகளை மதிப்பீடு செய்து, ஏசியன் பாங்கரினால் வழங்கப்பட்ட விவரமான புள்ளியிடலில் அமானா வங்கியின் உறுதியான நிதிச் செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

பரிபூரணமான மற்றும் வெளிப்படையான புள்ளி விவர அட்டையினால் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஐந்தொகை நிதிச் செயற்பாடுகளின் ஆறு பிரிவுகளை மதிப்பீடு செய்திருந்தது. அதில் அளவிடும் ஆற்றல், ஐந்தொகை வளர்ச்சி, இடர் கோவை, இலாபகரத்தன்மை, சொத்தின் தரம் மற்றும் திரள்வுத் தன்மை போன்றன அடங்கியிருந்தன.







# சவூதி அரேபியாவின் ஸ்தாபக தினம்

சவூதி அரேபியாவின் 'ஸ்தாபக தினம்' என்பது மூன்று சவூதி மாநிலங்கள் தனித் தனியாக நிறுவப்பட்டு, பின்னர் அவை ஒருங்கிணைக்கப்பட்ட தினத்தைக் குறிக்கிறது.

இமாம் முஹம்மது பின் ஸஊத் அவர்கள் முதன் முதலாக, திரய்யாவைத் தலைநகராகக் கொண்ட சவூதி இராச்சியத்தை பெப்ரவரி 22, 1727 ஆம் திகதி நிறுவினார்.

அதனைத் தொடர்ந்து, இமாம் துர்கி பின் அப்துல்லா பின் முஹம்மது பின் ஸஊத் அவர்கள், ரியாதைத் தலைநகராகக் கொண்டு இரண்டாவது சவூதி இராச்சியத்தை, கி.பி. 1824 இல் உருவாக்கினார்கள்.

அடுத்த கட்டமாக, மன்னர் அப்துல்அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான் அவர்கள், மூன்றாவது சவூதி அரசை, கி.பி 1902 இல் ரியாதைத் தலைநகராகக் கொண்டு நிறுவியதோடு, இம்முப்பெரும் மாநிலங்களையும் ஒருங்கிணைத்து, 1932 ஆம் ஆண்டு 'சவூதி அரேபிய இராச்சியம்' என்ற தனி நாட்டை உருவாக்கினார்கள்.

இந்த ஸ்தாபக தின கொண்டாட்டமானது, சவூதி அரேபியா ஸ்தாபிக்கப்பட்டது முதல் அது தற்போதைய வளமான சகாப்தத்தை அடையும் வரையான அதன் மரபு மற்றும் ஆழ்ந்த வரலாற்றுப் பின்னணி போன்றவற்றை வெளிக்கொணர்வதில், இரு புனிதஸ் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அஸீஸ் ஆல் சஊத் மற்றும் பட்டத்து இளவரசரும், பிரதமருமான இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆகியோர் கொண்டுள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் எடுத்துக்காட்டுகின்ற சிறந்த சான்றாகும்.



இதன் அடிப்படையில், இரண்டு புனிதஸ்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி இருபத்தி இரண்டாம் தேதியை அரசு மற்றும் தனியார் துறைகளுக்கு அதிகாரபூர்வ விடுமுறையாகவும், தேசிய விடுமுறையாகவும் அறிவிக்கும் ஒரு விஷேட அரச ஆணையை வெளியிட்டார்.

ஸ்தாபக தினத்தை கொண்டாடுவது என்பது, சவூதி அரேபியாவின் உறுதியான அடித்தளத்தைப் பற்றி அதன் உயர் விழுமியங்கள், கலாசாரம், சமூக பாரம்பரியம் மற்றும் அதன் சிறந்த வரலாறு, நாகரிகம், ஆகியவற்றில் பெருமை கொள்வதைப் பிரதிபலிக்கிறது.

இறுதியாக, இந்த பொன்னான சந்தர்ப்பத்தில், இரண்டு புனிதஸ்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அஸீஸ் ஆல் சஊத் அவர்களுக்கும் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல்அஸீஸ் அவர்களுக்கும் மற்றும் சவூதி அரேபிய மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது நல் வாழ்வுக்காகவும் அவர்களுக்கு உதவியும் வெற்றியும் அளித்து, எமது நாட்டின் பாதுகாப்பையும், ஸ்திரத்தன்மையையும், செழிப்பையும் பேணிப்பாதுகாக்குமாறும் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறேன். இலங்கை குடியரசுக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் மூத் அல்-க்தானி.




# Sunshineஇன் Diamond அனுசரணை

Sunshine Healthcare Lankaவின் ஒரு பிரிவான Sunshine Medical Device, இலங்கையின் யுநெளவாநளைழடழபளைவள நிபுணர்கள் மற்றும் தீவிர சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்ட, சமீபத்தில் முடிவடைந்த 40வது வருடாந்த கல்விக் காங்கிரஸ ின் Diamond அனுசரணையாளராக கூட்டுசேர்ந்தது.

கொழும்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக RCOA (UK)இன் துணைத் தலைவர் டொக்டர் ஹெல்ஜி ஜோஹன்னசன் மற்றும் கௌரவ விருந்தினராக ஐக்கிய இராச்சிய தேசிய சுகாதார சேவையின் (NHS) விமர்சன மற்றும் அறுவை சிகிச்சை பராமரிப்புக்கான தேசிய மருத்துவ பணிப்பாளர் பேராசிரியர் ரமணி முனசிங்க உள்ளிட்ட புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது, ஆலோசகர்கள், பதிவாளர்கள், மருத்துவ அதிகாரிகள் மற்றும் கிராமப்புற மருத்துவமனை ஆலோசகர்களிடையே உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதில் Sunshine Medical Devices முக்கிய பங்கு வகித்தன. நிறுவனச் சாவடி ஒத்துழைப்புக்கான மையப் புள்ளியாகச் செயல்பட்டது மற்றும் சன்ஷைனின் பல்வேறு வகையான தயாரிப்புகளை ஆராய்ந்து புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை மருத்துவ நிபுணர்களுக்கு வழங்கப்பட்டது. ஆலோசகர்கள் சன்ஷைனின் தயாரிப்பு போர்ட்ஃ போலியோவில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்,

இதில் யுசைறயல ஆயயெபநஅநவெ தயாரிப்புகள், Pain Management தயாரிப்புகள், Hypertherஅயை ஆயயெபநஅநவெ தயாரிப்புகள், Secretion Management தயாரிப்புகள், மருந்து மற்றும் ஐகெரளழைெ விநியோக அமைப்புகள் மற்றும் Blood Gas Analyzers ஆகியவை அடங்கும்.

# Seylanஇன் நீர் சுத்திகரிப்பு திட்டம்



செலான் Developments PLC> முக்கியமானதொரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) முயற்சியின் பணிகளை நிறைவு செய்துள்ளதாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

இந்த முயற்சியானது இலங்கையின் அனுராதபுர மாவட்டத்தில் உள்ள பதவியா மகாசென் ஆரம்பப் பாடசாலையில் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றிற்கு நிதியளித்து அபிவிருத்தி செய்வது தொடர்பானது.

545 மாணவர்களையும் 20 ஆசிரியர்களையும் உள்ளடக்கிய பதவியா மகாசென் ஆரம்பப் பாடசாலையானது தொடர்ந்து நீர் தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்வதோடு மட்டுமல்லாது இதன் காரணமாக பிராந்தியத்தில் சிறுநீரக நோய்களின் பரவலுக்கும் முகம்கொடுக்கின்றது.

தற்போது பாடசாலையில் முறையான குடிநீர் வசதி இல்லாததால், நாள் முழுவதும் வகுப்பறைகளில் உள்ள மட்பானைகளை நிரப்ப வேண்டிய கட்டாயத் தேவைக்கு பெற்றோர் ஆளாக்கப்படுகின்றனர். இந்தக் கடினமான செயலுக்கு நேரத்தை ஒதுக்குவதில் பெற்றோர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பதவியா சமூகத்தில் சுத்தமான மற்றும் இலகுவாக கிடைக்கக்கூடிய குடிநீரின் தேவையை உணர்ந்து, ஊளுசு முயற்சியின் மூலம் இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும் பொறுப்பை செலான் Developments PLC ஏற்றுக்கொண்டுள்ளது.

பதவியா மகாசென் ஆரம்பப் பாடசாலையில் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவும் பொருட்டு நிறுவனம் குறிப்பிடத்தக்க தொகையாக ரூபாய் 1 மில்லியனை முதலீடு செய்துள்ளது.



# மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் கைகோர்க்கும் Softlogic Life

இலங்கையின் 2ஆவது பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life> 'Softlogic Life Tech Wizards' என்ற மூலோபாய திட்டத்தின் கீழ் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையுடன் ஒத்துழைக்கும் முதல் காப்புறுதி நிறுவனமாக மாறியுள்ளது.

இது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கைச்சாத்திடப்பட்டதுடன், இது இலங்கை இளைஞர்களுக்கு டிஜிட்டல் மாற்றத்திற்கு வலுவூட்டுவதுடன், இலங்கையின் காப்புறுதித் துறையின் தொழில்நுட்ப பரிணாமத்தை முன்னெடுப்பதற்கு திறமையான புத்தாக்கங்களை ஈர்க்க Softlogic Life க்கு உதவும்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்து நிகழ்வில் ளுழகவடழபளைஉ டுகைந இன் முகாமைத்துவ பணிப்பாளர் இப்திகார் அஹமட், Softlogic Life இன் பிரதம டிஜிட்டல் புத்தாக்க அதிகாரி சாரங்க விஜயரத்ன, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் டே. னு. குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறையின் தலைவர் கலாநிதி உதயசங்கர் தயாசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கையின் எதிர்கால டிஜிட்டல் புத்தாக்கத் தலைவர்களை வடிவமைக்கும் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையின் காப்புறுதி நிறுவனம் ஒன்று இவ்வாறான மூலோபாய பங்காளித்துவத்தை உருவாக்கியுள்ள முதல் தடவையாக இந்த மைல்கல் கையொப்பமிடப்பட்டுள்ளது.




# தொழில்முறை வங்கியாளர் சங்க மாநாட்டின் Gold Partner இலங்கை வங்கி

இலங்கையின் முதற்தர வங்கியான இலங்கை வங்கி கொழும்பு ஹில்டன் விடுதியில் நடைபெற்ற இலங்கைத் தொழில்முறை வங்கியாளர் சங்கத்தின் 34ஆவது ஆண்டுநிறைவு விழாவில் அதன் Gold PartnerMf கைகோர்த்துக் கொண்டது.

இந்நிகழ்வில் வங்கித்துறை வல்லுநர்கள், முன்னணி தொழிற்துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள், பங்கீடுபாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

புகைப்பட த்தில் இடமிருந்து வலமாக இலங்கைத் தொழில்முறை வங்கியாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. டில்ஷான் பெரேரா (பிரதித் தலைவர்), திரு. ஹலின் ஹெட்டிகொட (சிரேஷ்ட பிரதித் தலைவர்) திரு. பி.ஏ.எச்.எஸ். பிரேன (தலைவர்) ஆகியோரிடம் இலங்கை வங்கி சார்பில் கலந்துகொண்ட திரு. சமீர லியனகே (பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி), திரு. ருவான் சமரக்கொடி (உதவிப் பொது முகாமையாளர் சந்தை இடர் மற்றும் செயற்பாட்டு இடர்), திரு. சுரேஷ் பெரேரா (உதவிப் பொது முகாமையாளர் வங்கிக் கணக்கு மேம்பாடு மற்றும் வியாபாரச் செயன்முறை மீள்-கட்டமைப்புச் செயற்றிட்டம்) ஆகியோர் காசோலையைக் கையளிப்பதனைப் படத்திற் காணலாம்.